# GRADUATE ENTREPRENEURSHIP TRAINING OF I.N.D.I.A. TRUST (GET-IT)

**TRAINING ORGANISATION**

I.N.D.I.A. TRUST
BUILDING PEOPLE BUILDING INDIA

தேசிய அளவிலான தொழில் முனைவோருக்கானத் திறன்களை மேம்படுத்தும் பயிற்சித் திட்டம்

| | |
|---|---|
| **N** | **National Level** |
| **E** | **Entrepreneurship** |
| **S** | **Skills** |
| **T** | **Training** |

**PROJECT ORGANISATION**

SpellBee™ International
Language for Life

**English language development mission**

# I.N.D.I.A. TRUST

## (Integrated National Development in Action Trust)

## (a National Public NGO)

**Nodal Centre for Entrepreneurship Development Institute of India**
**(Tamil Nadu, Kerala & Andhra Pradesh, Pondichery)**

**Sponsored by,**

**Friedrich – Naumann – Stifung, Germany**

**Supported By:**

**Human Resources Development Ministry,**
**Commissionerate and Directorate of small Scale Industries,**
**National Science & Technology Entrepreneurship Development Board,**
**Department of Science & Technology (Govt. of INDIA) and**
**National Entrepreneurship Development Board.**

## FOR THE KIND ATTENTION OF GRADUATE AND POST GRADUATE STUDENTS:

Your 18-20 years of education journey, right from your flint standard of graduation, should come to an end successfully with a good career, We will be your trusted partner to achieve this goal

இன்றைய சூழ்நிலையில் கல்லூரிகளில் படித்து முடித்து வெளிவரும் இலட்சக்கணக்கானப் பட்டதாரிகள் அனைவருக்கும் நூற்றுக்கு நூறு சதவீதம் (100%) வேலைவாய்ப்புக் கிடைக்கும் சாத்தியக்கூறு உள்ளதா? இன்றைய பட்டதாரி இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தடையாக இருக்கின்ற காரணங்கள் என்னென்ன?

| | | |
|---|---|---|
| • Lack of Personality | • Poor Health | • Lack of Self-Management |
| • Lack of Technical Skills | • Closed Mind | • Lack of Self-Motivation |
| • Lack of Communication | • Frustration | • No Industry Exposure |
| • Lack of Job Knowledge | • Poor Self Esteem | • Distrust |
| • Lack of Confidence | • Prejudice | • Confusion |
| • Inferiority Complex | • Negative Mental Attitude | • Lack of Discipline |
| • Rural Background | • Lack of Leadership Skills | • Shyness & Fear |
| • Closed Mind | • No Encouragement | • Stress |

## WITH ALL THESE PROBLEMS,

➞ Are you going to be unemployed?
➞ Are you going to search for a job without proper skills?
➞ Are you going to fail in interviews because of lack of knowledge in employability skills?

OR

**ARE YOU GOING TO TAKE THE RIGHT DECISION TO BECOME AN EMPLOYEE OR AN ENTREPRENEUR, TO ACHIEVE A SUCCESSFUL CAREER IN YOUR LIFE?**

இன்றைய மாணவர்கள் பலரும் பல்வேறு திறமைகள் மற்றும் அறிவும், ஆற்றலும் மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆனால் சரியான வேலை மற்றும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கான வாய்ப்புகளையும் தேடிப் பெற்றுக் கொள்ளும் திறன்பாடுகளை மட்டும் கற்றுக்கொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றார்கள். அவர்களுக்கான வழிமுறையையும் வழிகாட்டுதலையும் கற்றுக் கொடுத்தால், நூற்றுக்கு நூறு சதவீதம் அவரவர் வாழ்க்கையில் வெற்றி பெறுவார்கள் என உறுதியாக நம்புகிறோம்.

I.N.D.I.A. TRUST கடந்த 20 ஆண்டுகளாக 5 லட்சம் மாணவர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பாலமாக இருந்துள்ளது. 50 ஆயிரம் மாணவர்கள் வேலைவாய்ப்பு மற்றும் தொழில் செய்வதற்கானப் பயிற்சியினைப் பெற்றிருக்கிறார்கள். ஆகவே இனி நீங்கள் உங்களுடைய எதிர்காலத்தை நினைத்துக் கவலையுறத் தேவையில்லை.

**So take your decision now !**
**Join our Mission !**
**Gain Entrepreneurship Skills !**

**GET READY TO SUCCEED IN YOUR LIFE!**
**Leave Your Past! Live Your Present! Lead Your Future!**

**WE CANNOT PREPARE A FUTURE FOR YOU, BUT WE CAN CERTAINLY PREPARE YOU FOR THE FUTURE !**

## அறிமுகவுரை:

தமிழகத்தில் இன்று ஆயிரக்கணக்கானக் கல்லூரிகளிலிருந்து இலட்சக்கணக்கான மாணவர்கள் பட்டதாரிகளாக வெளிவந்து கொண்டிருக்கிறார்கள். இவர்கள் எந்த திசையை நோக்கிச் சென்றுக் கொண்டிருக்கிறார்கள்?

நூற்றில் 10 சதவீத இளைஞர்களுக்கு மட்டுமே படித்த படிப்பிற்கு ஏற்ற ஒரு நல்ல பணி (Decent Employment with job satisfaction) அமைவதற்கான வாய்ப்புகளும் வசதிகளும் கிடைக்கின்றன.
25 சதவீத மாணவர்களுக்குப் படிப்புக்கேற்ற வேலை இல்லாவிட்டாலும் சராசரியாக ஏதாவது ஒரு வேலை (Under-Employment) கிடைத்து விடுகிறது.
50 சதவீத மாணவர்கள் நன்கு படித்திருந்தும், ஓரளவிற்கு வேலைக்குத் தேவையானத் தகுதிகள் பெற்றிருந்தும் பணிக்குப் பொருத்தமில்லாதவர்களாகவே (Unemployable) காணப்படுகிறார்கள்.

மீதமுள்ள 15 சதவீத இளைஞர்கள் வாழ்க்கையில் எந்தவிதக் குறிக்கோளும், எதிர்பார்ப்பும் இல்லாமல் இருக்கின்றார்கள்.

இவ்வாறு பல்வேறு நிலைகளில் நமது பட்டதாரி இளைஞர்கள் இருந்தாலும், கற்ற கல்வியை வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் பயன்படுமாறு அமைத்துக் கொண்டு இலட்சியப் பாதையில் வெற்றிகரமாக நடைபோட வேண்டும் என்ற குறிக்கோளுடன் இன்னும் பல இலட்சக்கணக்கான மாணவர்கள் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

மேலே குறிப்பிட்டபடி வாழ்ந்து கொண்டிருக்கும் இலட்சக்கணக்கானத் தமிழக இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றி அமைத்து, அவர்களது வாழ்க்கையில் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கிக் கொடுத்துக் கொண்டிருக்கிறது எங்கள் நிறுவனமான I.N.D.I.A. TRUST.

I.N.D.I.A. TRUST கடந்த 20 வருடங்களாகத் தேசிய அளவில் இயங்கும் ஒரு அரசு சாரா நிறுவனம். உலகப் புகழ் பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் International Associate Partner - ஆக 5 வருடங்கள் இயங்கி வந்திருக்கின்றோம். (Cambridge University - U.K)

EDII (Entrepreneurship Development Institute of India) எனப்படும் இந்தியாவின் மிகச்சிறந்த சுயதொழில் முன்னேற்றப் பயிற்சியினை வழங்கும் தேசிய அமைப்பின் தென்னிந்தியப் பிரதிநிதியாக இருக்கின்றோம்.

## நமது நாட்டு இளைஞர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் மேற்கண்ட பிரச்சினைகளிலிருந்து அவர்களை வெளியே கொண்டு வரும் வழிமுறைகள் யாவை?

- தன்னம்பிக்கை ஊட்டுதல்.
- தனி நபருக்கு ஏற்ற வழிகாட்டுதல்.
- சமுதாயப் பொறுப்புணர்வுடன் கூடிய சுய தொழிலில் ஈடுபடுத்துதல்.
- உயர்ந்த சிந்தனைகளுடன் கூடிய தலைமை மனப்பான்மையை அளித்தல்.
- திடகாத்திரமான ஆரோக்கியத்தை அளித்தல்.
- கல்வி கற்கும் போதே சுயமாகப் பகுதி-நேர வருமானம் ஈட்ட வழிகாட்டுதல்.
- உண்மையான உழைப்பின் முக்கியத்துவத்தை உணரச் செய்தல்.
- தாழ்வு மனப்பான்மையைப் போக்குதல்.
- வெற்றிகரமான மனிதர்களைச் சந்திக்க வைத்தல்.
- சரளமாகவும், தன்னம்பிக்கையுடனும் ஆங்கிலத்திலும், தாய்மொழியிலும் பேசவைத்தல்.
- தவறான எண்ணங்களைப் போக்கி, சரியான முறையில் சிந்திக்க வைத்தல்.
- அறிவு, ஆற்றல், அன்பு, ஆன்மீகம் இவற்றை ஒருங்கிணைத்தல்.
- சமூகப் பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகளைப் போதித்தல்.
- கல்வி அறிவுக்கும் - தொழில் நிர்வாகச் சிந்தனைக்கும் தொடர்பை ஏற்படுத்துதல்.

பல நூற்றுக்கணக்கானக் காரணங்கள் இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் தடைக்கற்களாக இருக்கலாம், ஆனால் இத்தடைகள் எல்லாவற்றையும் உடைத்தெறிந்து வாழ்க்கையில் முன்னேறி, தன்னையும், தன்னைச் சார்ந்த குடும்பத்தையும், தான்வாழும் சமுதாயத்தையும், உயர்த்த வேண்டும் என்று ஒவ்வொரு இளைஞனும் இலட்சியக் கனவுடன் வாழ்ந்து கொண்டுதான் இருக்கின்றான்.

இந்தியா டிரஸ்ட் (I.N.D.I.A. TRUST), தமிழகத்தில் உள்ள பல்வேறு கல்லூரிகளிலிருந்து முதற்கட்டமாக பத்தாயிரம் மாணவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களது வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், வேலை வாய்ப்புக்கானத் திறன்பாடுகளை மேம்படுத்துவதற்கும், சுயதொழில் செய்வதற்குமான மேலாண்மைப் பயிற்சியை அளிப்பதற்கும் முன்வந்துள்ளது.

இந்திய தேசத்தை ஒரு வல்லரசு நாடாக மாற்றத் துடிக்கும் ஒவ்வொரு இளைஞனையும் I.N.D.I.A. TRUST வரவேற்கிறது.

வாருங்கள்!

வளர்ச்சிப்பணியில் ஈடுபடுங்கள்!

வாழ்க்கையில் முன்னேறுங்கள்!

வெற்றி வாகை சூடுங்கள்!

## I.N.D.I.A. TRUST – வழங்கும் SOCIAL ENTREPRENEURSHIP PROJECT

SOCIAL ENTREPRENEURSHIP என்ற கருத்து இன்று உலகில் பல்வேறு வளர்ந்து வரும் நாடுகளில் மிகவும் சிறப்பான முறையில் கல்வித்துறையிலும், தொழில் துறையிலும், சமூகத்துறையிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகிறது.

ஒரு நிறுவனத்தின் லாபகரமான வளர்ச்சியும், அரசாங்கத் திட்டங்களின் மேம்பாடும், சமூகத்தின் பலமும், தேசத்தின் வளமும் ஒரு தொடர்ச்சியானக் கூட்டுறவின் உடன்பாடுகள். இவை யாவுமே தனித்தனியாக இயங்க இயலாது. மேற்கண்ட எல்லாத் துறைகளின் முதன்மை நோக்கம், தனிப்பட்ட ஒரு மனிதனின் பொருளாதார வளர்ச்சியே. ஆகவே, நமது நாட்டின் தனியொரு மனிதனின் பொருளாதார வளர்ச்சி எந்த நிலையில் இருக்கிறது என்பதைச் சற்று ஆராய்ந்து பார்ப்போம்.

இன்று இந்தியாவை ஒரே விதமானப் பொருளாதாரம் கொண்ட நாடாக ஏற்றுக் கொள்ள முடியாது.

இந்தியா ஒரு “பணக்காரர்கள் உள்ள ஏழை நாடு அல்லது ஏழைகள் உள்ள பணக்கார நாடு” என்றுதான் விவரிக்க முடியும். ஏழ்மைக்கும் பொருளாதார மேன்மைக்கும் இடையே இருக்கும் ஒரே பாலம் கல்வி வளர்ச்சி. இந்தியாவில் உள்ள ஒவ்வொரு சராசரி மனிதனும் தன்னுடையப் பொருளாதார மேன்மையையும் வாழ்க்கை முன்னேற்றத்தையும், சமூக அந்தஸ்த்தையும், அறிவுப் பலத்தையும் அடைவதற்கான ஒரே வழிக் கல்விதுறையே.

தமிழ்நாட்டில் 25-க்கும் மேற்பட்ட பல்கலைக் கழகங்கள், 1500-க்கும் மேற்பட்ட கல்லூரிகள், 10000-க்கும் மேற்பட்ட தனியார் பள்ளிகள், அதே அளவில் அரசு பள்ளிகள் என்று கல்வித்துறை மிகப்பெரிய ஒரு துறையாக வளர்ந்துள்ளது. குறைந்த பட்சம் 50 லட்சம் குழந்தைகள் பள்ளிகளில் படித்துக் கொண்டிருக்கிறார்கள், 10 லட்சம் மாணவர்கள் கல்லூரிகளில் மேற்படிப்பு படித்துக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்குப் பத்து சதவீதம் மாணவர்களே, கல்லூரி மேற்படிப்பை அடையும் சூழ்நிலையில் இருக்கிறார்கள். அதிலும் மிகக் குறைவானவர்களேப் படித்துப் பட்டம் பெற்றுக் கல்வி உலகில் இருந்து வெளிவந்து வாழ்க்கை முன்னேற்றம் என்ற பாதையில் காலடி எடுத்து வைக்கிறார்கள்.
இந்த விவரங்கள் SOCIAL ENTREPRENEURSHIP என்ற துறையைத் தேர்ந்தெடுப்பவருக்கு மிகவும் தேவையான விஷயம்.

## SOCIAL ENTREPRENEURSHIP என்ற வார்த்தையின் விளக்கம் என்ன?

பொதுவாக ENTREPRENEURSHIP என்ற வார்த்தைக்கு அர்த்தம் ஒருவர் சுயமாக தன்னுடைய அறிவையும் திறமையும் பயன்படுத்தித் தன்னுடைய பொருளாதார வளர்ச்சிக்குத் தாமே காரணமாக இருப்பவர். ENTREPRENEURSHIP-ஐக் கீழ்க்கண்ட பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. Industrial Entrepreneur - தொழிற் சாலைகளை உருவாக்கி, பல பேருக்கு வேலை கொடுப்பவர்.

2. Business Entrepreneur - தொழில் ரீதியாக வாய்ப்புகளை உருவாக்குபவர்.

3. Educational Entrepreneur - பள்ளிகளையும் கல்லூரிகளையும் கல்வி சார்ந்த தொழில்களையும் தோற்றுவிப்பவர்.

4. Trade Entrepreneur - கடைகள், உணவு விடுதிகள் போன்ற வியாபார நிறுவனங்களை அமைத்துக் கொள்பவர்

5. Social Entrepreneur என்பவர் சமூக நலமேம்பாட்டுத் துறைகளைத் தேர்ந்தெடுத்துத் அந்த துறைகளில் காணப்படும் வாய்ப்புகளை ஆராய்ந்து பார்த்து பயன்படுத்தித் தன்னைச் சுற்றி உள்ள சமுதாயத்தை உயர்த்துவதின் மூலமாக தன்னுடைய பொருளாதார நிலையையும் உயர்த்திக் கொள்பவர்.

## மேற்கண்ட பல்வேறு துறைகளில் பல்வேறு உதாரணங்களை கூறலாம்.

1. தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரிக்கும் நிறுவனம், தொலைக்காட்சிப் பெட்டிகளை விற்பதின் மூலமாக லாபம் சம்பாதிக்கிறது. அந்த நிறுவனம் தயாரித்தத் தொலைக்காட்சிப் பெட்டி எல்லோருடைய இல்லங்களிலும் செய்யும் சேவை என்ன என்பது எல்லோருக்கும் தெரியும்.
2. Car தயாரிக்கும் ஒரு தொழிலதிபர், Car விற்பதின் மூலமாக லாபம் சம்பாதிக்கிறார். Car-ஐ வாங்கும் ஒவ்வொருவரும் அதை எவ்வாறுப் பயன்படுத்துகிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும்.
3. Ice Cream தயாரிக்கும் நிறுவனம் எப்படி ஒவ்வொரு குடும்பத்தையும் மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது என்பது எல்லாருக்கும் தெரியும்.
4. காலணிகளை விற்கும் ஒரு கடை அதுபோல் நமது கால்களுக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கிறது.
5. மெத்தையை விற்கும் நிறுவனம் அவ்வாறே நமக்கு ஒரு சுகமான அனுபவத்தையும் தூக்கத்தையும் அளிக்கிறது.
6. இவ்வாறாக உலகில் நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளும் யாரோ ஒரு தொழில் அதிபரால் தயாரிக்கப்பட்டு வேறு சிலர் மூலம் நம்மை வந்தடைந்து, நமக்குப் பல்வேறு பயன்களை அளிக்கிறது.

இன்று ஒவ்வொரு குடும்பமும், தங்களது குடும்பத்திற்குத் தேவையான அவசியமானப் பொருட்களைத் தங்களது பொருளாதார நிலைக்கு ஏற்பப் பணம் செலவழித்து வாங்கிக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஒரு சராசரி குடும்பம் சைக்கிளை வாங்குகிறது அதற்கு அடுத்தபடியான நிலையில் உள்ளவர்கள் Motor Cycle வாங்குகிறார்கள், அதற்கும் அடுத்த நிலையில் இருப்பவர்கள் பற்பல விலைகளில் கார்களை வாங்குகிறார்கள்.

இவ்வாறாகக், கல்வி நிலைப்பாட்டிலும் ஒவ்வொரு குடும்பமும் தங்களுடைய குழந்தைகளின் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் தங்களுடைய குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு கல்வி உலகில் முதலீடாகச் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள்.

அரசுப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் குழந்தைகளைப் படிக்க வைக்கும் பெற்றோர்களுக்கு அரசாங்கம் மிகப்பெரிய அளவிற்குப் பொறுப்பேற்று கொள்கிறது. ஆனால் தனியார் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கும் பெற்றோர்கள் தங்களது வருமானத்தின் மிகப்பெரியத் தொகையைக் கல்விக்குச் செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள்.

## அகில இந்திய அளவில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆராய்ச்சியில், கீழக்கண்ட விவரங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு பட்டதாரியைத் தங்கள் குடும்பத்தில் உருவாக்குவதற்கு முதல் வகுப்பிலிருந்து கல்லூரி (பதினேழு முதல் இருபது வருடங்கள்) வரைக் கல்விக்காகச் செலவழிக்கும் தொகையினைக் கீழ்கண்டவாறு அட்டவணையிட்டு இருக்கிறார்கள்.

1. சராசரி குடும்பம் - ரூ. 3 லட்சத்திலிருந்து ரூ. 5 லட்சம் வரை.
2. நடுத்தரக் குடும்பம் - ரூ. 5 லட்சத்திலிருந்து ரூ. 10 லட்சம் வரை.
3. உயர் நடுத்தரக் குடும்பம் - ரூ. 10 லட்சத்திலிருந்து ரூ. 15 லட்சம் வரை.
4. பணக்காரக் குடும்பம் - ரூ. 15 லட்சத்திற்கும் மேல்.

இந்தத் தொகையானது ஒவ்வொரு குடும்பமும் தங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்காகவும் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் செய்யப்படும் செலவு.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள் வெறும் கல்விக்கட்டணம், புத்தகச் செலவுகளுக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல.

ஒரு குழந்தைக்கு வாங்கிக் கொடுக்கப்படும் விளையாட்டுப் பொருட்கள், அழைத்துச் செல்லப்படும் சுற்றுலாக்கள், கேளிக்கைகள், கொண்டாட்டங்கள், பண்டிகைகள் என்று எல்லாச் செலவுகளுமே இதில் அடங்கும்.

தங்கள் குடும்பத்தில் உள்ள குழந்தைகளின் சந்தோஷத்திற்காகவும் அதன் மூலமாக குழந்தைகள் தங்கள் மனநிலையைச் சரிவர வைத்துக் கொள்ளவும்,
இதன் அடிப்படையில் குழந்தைகளைச் சரிவர ஊக்குவிப்பதற்கும், அந்த ஊக்குவிப்பின் காரணமாக நன்றாகப் படித்து முன்னேறுவதற்கும், பெற்றோர்கள் அர்ப்பணிக்கும் பணத்தின் கூட்டுத் தொகைதான் அது.

ஆகவே இன்று நமது தேசத்தில் சராசரி ஒவ்வொரு குடும்பமும் தங்கள் ஏழ்மை நிலைமைப் பற்றி கவலைப்படாமலும், தங்களதுப் பொருளாதார நிலையைப் பற்றி யோசிக்காமல், தங்களது குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கும் வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் மிகப்பெரிய அளவு பணம் செலவழித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள் என்பது நாம் யாவரும் அறிந்த உண்மை.
இப்பொழுது Social Entrepreneur என்று கூறப்படும் சமுதாய மேம்பாட்டிற்கானத் தொழில் முனைவோர், தங்களது அறிவுத்திறனைச் சிறிதுப் பயன்படுத்தி ஆராய்ச்சி செய்ய வேண்டும்.

இலட்சக்கணக்கானக் குடும்பங்கள், கோடிக்கணக்கானப் பணத்தைத் தங்கள் குழந்தைகளில் கல்வி வளர்ச்சிக்கும், வாழ்க்கை முன்னேற்றத்திற்கும் செலவழித்துச் கொண்டிருக்கும் இந்தக் காலக்கட்டத்தில் கற்றக் கல்விக்கும், வாழ்க்கைக்கும், இடையில் காணும் இடைவெளியின் அளவு என்ன? இரண்டு பல்கலைக் கழகங்கள் கீழ்கண்டப் புள்ளி விவரத்தை அளிக்கின்றன.

1. நூற்றுக்குப் பத்து சதவிகிதப் பட்டதாரிகளே வேலை பெறத் தகுதியும், பொருத்தமும் உள்ளவர்களாகக் காணப்படுகிறார்கள்.
2. நூற்றுக்கு ஆறு சதவிகிதப் பொறியியல் பட்டதாரிகளே வாழ்வில் முன்னேறுவதற்கான திறமைகளையும், ஆற்றல்களையும் பெற்றிருக்கிறார்கள்.

## இந்தப் புள்ளி விவரங்கள் நமக்குக் கூறும் செய்திகள் என்ன?

சராசரி மற்றும் ஏழ்மைக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவர்கள் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சேர்ந்து 17 முதல் 20 வருடங்கள் படிப்பதன் நோக்கம் என்ன? அவர்களுக்குப் படிப்பைச் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களின் கடமைதான் என்ன?

அந்த ஆசிரியர்களை நிர்வகித்து, ஊக்குவித்து சரியாகச் செயல்பட வைக்கும் அதிகாரிகளின் எண்ணங்கள் என்ன? இம்மாபெரும் கல்வித் துறையைத் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கும் கல்வியாளர்கள், சான்றோர்கள், மாமேதைகள் இவர்களின் தலைமை மனப்பான்மை என்ன?

இக்கேள்விக்கணைகளோடு நாம் எந்தத் துறையினரையும் பார்க்கப் போவதில்லை.

ஆனால் Social Entrepreneur என்ற முறையில் சமுதாயத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் சில குறைகளை நிவர்த்தி செய்வதற்கு நாம் முயற்சிக்கலாம்.

I.N.D.I.A. TRUST கடந்த 20 வருடங்களாக இந்தத் துறையில் ஈடுபட்டு பல்வேறு வகைகளில் பல்லாயிரக்கணக்கான குழந்தைகள், மாணவர்கள், குடும்பங்களுக்கு அறிவு சார்ந்த Social Entrepreneurship என்ற முறையில் நாம் எப்படி அந்த இடைவெளியைக் குறைக்க முடியும், குறைகளைத் தீர்த்து வைக்க முடியும், நிறைகளைத் தீர்வாக அளிக்க முடியும் என்பதுதான் நாம் நமக்கே விதித்துக் கொள்ளக் கூடியக் கடமை.

I.N.D.I.A. TRUST-டுடன் இணைந்து நீங்கள் யாவரும் Social Entrepreneur-ஆக இந்தக் கல்வி உலகில் தீர்த்து வைக்கக்கூடியப் பிரச்சினைகள் என்ன?

அ) மாணவர்களுக்குக் கீழ்கண்டக் வழிமுறைகளைச் சொல்லி கொடுத்தல்.

1. தன்னம்பிக்கை ஊட்டுதல்.
2. தனி நபருக்கு ஏற்ற வழிகாட்டுதல்.
3. தாழ்வு மனப்பான்மையைப் போக்குதல்.
4. உயர்ந்த சிந்தனைகளுடன் கூடியத் தலைமை மனப்பான்மை அளித்தல்.
5. தவறான எண்ணங்களைப் போக்கிச் சரியான முறையில் சிந்திக்க வைத்தல்.
6. வெற்றிகரமான மனிதர்களைச் சந்திக்க வைத்தல்.
7. கல்வி அறிவுக்கும் - தொழில் நிர்வாகச் சிந்தனைக்கும் தொடர்பு ஏற்படுத்துதல்.
8. சரளமாகவும் தன்னம்பிக்கையுடனும் ஆங்கிலத்திலும், தாய்மொழியிலும் பேச வைத்தல்.
9. கல்வி கற்கும் போதேச் சுயமாகப் பகுதி நேர வருமானம் ஈட்டுதல்.
10. சமுதாயப் பொறுப்புணர்வுடைய சுய தொழில் ஈடுபடுத்துதல்.
11. திடகாத்திரமான ஆரோக்கியம் அளித்தல்.
12. அறிவு, ஆற்றல், அன்பு, ஆன்மீகம் இவற்றை ஒருங்கிணைத்தல்.

ஆ) பெற்றோர்களுக்கு

1. குழந்தைகளைச் சிறப்பாக வளர்க்கும் வழிமுறைகள்.
2. வயது வந்த குழந்தைகளை நிர்வகிக்கும் முறை.
3. பள்ளியுடனும் கல்லூரியுடனும் இணைந்து தங்கள் குழந்தைகளின் வாழ்க்கை முன்னேற்றதிற்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
4. தங்களது நல்ல குடும்பத்தை நல்லதொரு பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு அறிவு சார்ந்த நடவடிக்கைகளைச் செயல்படுத்துதல்.
5. ஒவ்வொரு பெற்றோரும் தங்களது தனிப்பட்ட அறிவு, ஆற்றல், உணர்வு இவை போன்ற ஆளுமைத் தன்மையைப் பெருக்கிக் கொள்ளுதல்.

இ) பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் ஆசிரியர் பெருமக்களுக்கு அவர்களது திறமைகளை மெருகூட்டும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துவது.

ஈ) ஒவ்வொரு பள்ளிகூடத்தையும், கல்லூரியையும் ஒரு தரமிக்க அறிவுக்கூடமாக உருவாக்குவது, இதற்கான முதற் சேவையாக ஒவ்வொரு பள்ளியிலும் கல்லூரியிலும் மனிதவள மேம்பாட்டுத் துறையை நிறுவனம் செய்தல்.

உ) பள்ளி மற்றும் கல்லூரி முதல்வர்களிடம் கலந்து ஆலோசனை செய்து அவர்களது தலைமையின் கீழ் எவ்வாறு, தரமானதாக, அறிவுப் பூர்வமானதாக வாழ்க்கை முன்னேற்றத்திற்கானக் கல்வி போதனைகளை உவந்து உருவாக்கப் பரிந்துரை புரிதல்.

இத்தகு சேவைகள் இன்று கல்வி உலகிற்கு மிகப்பெரிய அளவில் தேவைப்படுகிறது. ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு கல்வி நிலையமும் இச்சேவைகளைப் பெறுவதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏனென்றால், இன்று கல்வி உலகிற்கும் வாழ்வியல் உலகிற்கும் ஏற்பட்டிருக்கும் மிகப்பெரிய இடைவெளியைத் தீர்த்து வைப்பதற்கானத் தகுதியும் பொருத்தமும் Social Entrepreneur-களுக்கு மட்டுமே உண்டு.

உலகம் முழுதும் இந்த மாதிரியான முயற்சிகள் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நூற்றுப் பத்துக் கோடி மக்கள் தொகையுடன் இன்று வேகமாக வளர்ந்து கொண்டிருக்கும் இந்தியாவின் சமுதாய மேம்பாடு, Social Entrepreneur–கள் கைகளில்தான் உள்ளது.

நீங்கள் ஒவ்வொருவரும் தனியொரு மனிதனாக இம்முயற்சியில் ஈடுபடலாம். இதற்குத் தேவையாக உங்களிடம் இருக்க வேண்டிய 10 குணங்களும், திறன்பாடுகளும்.

1. தன்னம்பிக்கை
2. தனிமனித வாழ்க்கையில் சிறந்தப் பொருளாதார மேன்மையை அடைய விரும்பும் பண்பாடு.
3. நேர்மையான மனப்பான்மை.
4. ஊக்கமுடைமை
5. சமுதாயத்தின் மேல்ப் பரிவுணர்வு
6. உயர்ந்த மாற்றங்களைக் காணத் துடிக்கும் லட்சியம்.
7. ஒருங்கிணைந்த சீரிய சிந்தனை வளம்
8. தலைமைத்துவம்
9. பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன்பாடு
10. உலகளாவியப் பரந்த மனப்பான்மை

மேற்கூறியக் குணங்கள் யாவும் உங்கள் ஒவ்வொருவருக்குள்ளும் அமைந்திருக்கிறது என்று நாங்கள் நம்புகிறோம். ஆகவே I.N.D.I.A. **TRUST** உங்களிடம் எதிர்பார்த்தக் கடமையினை Social Entrepreneurship என்ற உந்துதலுடன் வெற்றிகரமாக முடிப்பீர்கள் என்று விரும்புகிறோம்.

# TRAINING CURRICULUM

## PERSONALITY DEVELOPMENT AND SOFT SKILLS



The difference between what we do and what we are capable of doing would suffice to solve most of the world's problems

- Mahatma Gandhi

| | |
|---|---|
| 01. Personal Development Skills | 02. Team Skills, Problem Solving & Decision Making |
| 03. Character Education | 04. Time Management – Goal Setting |
| 05. Leadership Skills | 06. IQ – PQ - EQ – SQ- Integrated Personality Management |
| 07. Creative & Thinking Skills | 08. Individual Social Responsibility |
| 09. Physical Fitness Education | 10. Quality in professional life |
| 11. Managing difficult people | 12. Relationship Management |
| 13. Public Speaking | 14. Goal Setting for projects |
| 15. Tough -Mind Management | 16. Emotional Intelligence |
| 17. Attitude Re-engineering | 18. Mind Management |
| 19. Role Analysis, Responsibilities | 20. Nation Building Activities |

## ENTREPRENEURSHIP MOTIVATION PROGRAMME:

### MODULES - I

1.1 THEORIES OF ENTREPRENEURSHIP

1.2 ENTREPRENEURSHIP IN THE INDIAN CONTEXT

1.3 ROLE OF ENTREPRENEURSHIP IN NATIONAL ECONOMIC DEVELOPMENT

1.4 SOCIAL ENTREPRENEURSHIP- A GENNEXT REVOLUTION

1.5 ESTABLISHING AN ENTERPRISE

### MODULES - II

2.1 PERSONAL MOTIVATIONS, ATTITUDES, CHARACTERISTICS AND COMPETENCIES OF SUCCESSFUL ENTREPRENEURS

2.2 PERSISTENCE AND COMMITMENT

2.3 LEADERSHIP

2.4 ACHIEVEMENT MOTIVATION

2.5 SEEKING OPPORTUNITY

2.6 GOAL SETTING AND RISK TAKING

### MODULES - III

3.1 BUSINESS PLAN ASSESSMENT

3.2 ACTION PLANNING ( LIFE GOAL AND PERSONAL ACTION PLAN)

3.3 MARKETING MANAGEMENT IN SMALL BUSINESS

3.4 SELF MANAGEMENT IN SMALL BUSINESS

3.5 VENTURE ANALYSIS

### MODULES - IV

4.1 ASSESSMENT OF CHOSEN ACTIVITY

4.2 IMPORTANCE OF MARKET SURVEY

4.3 MARKET FEASIBILITY

4.4 RESOURCE MOBILIZATION AND SUPPORT SYSTEMS

4.5 NEGOTIATION: STRATEGIES & TACTICS

4.6 PROBLEM SOLVING AND DECISION MAKING

### MODULES - V

5.1 SITUATION ANALYSIS AND CREATIVITY

5.2 RISKS AND REWARDS

5.3 POST TRAINING ENTREPRENEURIAL SELF-ASSESSMENT

# STEP BY STEP GUIDELINES FOR IMPLEMENTING ENTREPRENEURSHIP AWARENESS AND MOTIVATION PROGRAMME

1. Permitting us to conduct a two hour seminar for your second year or third year students, or both. The date of which can be fixed on a mutually convenient manner

2. I.N.D.I.A. TRUST will conduct the two hour seminar in your college under the following agenda.

    a. Awareness programme - 30 minutes
    b. Motivation - 30 minutes
    c. Psychometric test - 15 minutes
    d. Interactive session - 15 minutes
    e. Feedback - 15 minutes
    f. Concluding speech - 15 minutes

3. Based on the seminar, collect the feedback from the students who are interested to undergo the training programme for a period of three months on Distance education mode - Web based open learning system.

4. I.N.D.I.A TRUST office will send the list of selected students to the Head of the Institution and also communicate to the students individually.

5. I.N.D.I.A. TRUST will start sending lessons to the individual students on Entrepreneurship motivation on a fortnightly basis. Students will study the materials and send back feedback and assessments based on their learning process.

6. During this three months of training I.N.D.I.A. TRUST will also provide students practical exposure by giving them projects and business development plans, through which system students will get real time internship experience.

7. We will also give students opportunity to earn part time income during the practical experience period.

8. At the end of the three months' training students will appear for an Interactive assessment programme and will be certified for their successful completion of the programme.

9. The Principal or the coordinators of the programme will receive periodical reports with regard to the progress of the students.

10. The whole programme is brought to the students under the 100% Scholarship system and therefore the college will recommend or nominate career conscious and enterprising students for this programme.

SpellBee International
Language for Life

# ABOUT SPELLBEE INTERNATIONAL

SpellBee International came into existence to prepare our children for the future as 'children of today are the leaders of tomorrow'.

SpellBee International, in association with I.N.D.I.A. TRUST (www.indiatrust.org) has developed this movement targeting young students to cultivate and nurture their quest for communicative competence.

Unlike other spelling competitions all over the world, SpellBee International goes beyond the normal dynamics of testing only Spelling and holistically develops students' language competency.

I.N.D.I.A. TRUST, as a knowledge partner of SpellBee International, by virtue of its experience and expertise has assisted to take its operation to more than 10 states of India reaching more than 500 schools thereby benefiting a Lakh and odd students in the last two years.

For SpellBee International's projected operations for the ensuing year, I.N.D.I.A. TRUST is currently recruiting for the following positions of Human Resource.

In the midst of global and national recession in various sectors, we are presenting an integrated opportunity of training and placement for fresh graduates with enterprising personality and a proactive attitude.

# நாடு! அதை நாடு!

- இன்று நமது நாடு அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கல்வி, தொழில், வேளாண்மை முதலானப் பல்வேறு துறைகளிலும் மிக வேகமாக வளர்ந்து உலக நாடுகளிடையே முன்னிலையில் நிற்கிறது. வளர்ந்து வரும் பல்வேறு நாடுகள் இன்று இந்தியாவின் தலைமையை / தோழமையை எதிர்நோக்கி நிற்கின்றன.

---

- பொருளாதார ரீதியிலும், தொழில் ரீதியிலும் சர்வதேச வல்லமை படைத்துக் கொண்டிருக்கும் இத்தருணத்தில், அவ்வல்லமையைத் தொடர்ந்து காப்பதற்கும், அதை மென்மேலும் பெருக்குவதற்கும், எதிர்காலத்தில் தலைமை ஏற்று நடத்துவதற்குமானத் திறன்களை இன்றைய இளைஞர்கள் தகுந்த முறையில் பெற்றுள்ளனரா?

---

- அவர்கள் கற்ற கல்வியும், பெற்ற அறிவும், இந்நாட்டின் வளர்ச்சிக்கு எல்லாக் கோணங்களிலும் பயன்படுகின்றனவா?

---

- நாட்டையும், வீட்டையும் இணைக்கும் இந்த வெற்றிப் பாதையில் பீடு நடையிட்டுச் செல்ல இன்றைய இந்திய இளைஞர்கள் தகுதியானவர்களாகவும், பொருத்தமானவர்களாகவும், வலிமையுடையவர்களாகவும் இருக்கின்றார்களா?

---

- 64 ஆண்டுகளுக்கு முன் நாம் சுதந்திரம் அடைந்த பொழுது விரல் விட்டு எண்ணக் கூடிய அளவிற்கு மட்டுமே பல்கலைக்கழகங்களும், கல்லூரிகளும், பள்ளிகளும் இருந்தன. ஆனால் இன்று 500க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்கள், இருபது ஆயிரத்திற்கும் மேற்பட்ட அறிவியல், கலை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள், இலட்சக்கணக்கான பள்ளிக்கூடங்கள், மற்றும் ஆசிரியர்கள் கொண்ட மிகப் பெரிய அறிவுப்பூர்வமான நாடாக உருவாகியுள்ளோம்.

---

- ஒவ்வொரு வருடமும் 10 இலட்சம் இளைஞர்கள் தொழில்நுட்பத் துறைகளிலிருந்தும், 25 இலட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அறிவியல் மற்றும் கலைத் துறைகளிலிருந்தும் படித்து முடித்துவிட்டுப் பட்டதாரிகளாகக் கல்வி உலகிலிருந்து வெளியே வருகின்றார்கள். இவர்களது எதிர்காலம் என்ன?

---

- இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டிருக்கும் 'Vision 2020' குழு இந்தியாவில் இன்னும் 10 வருடங்களில் 10 கோடி இளைஞர்கள் வேலை இல்லாதவர்களாகவும், வேலைக்குத் தகுதியும், பொருத்தமும் இல்லாதவர்களாகவும் இருப்பார்கள், என்று கூறுகிறது.

---

- சுதந்திர இந்தியாவின் இந்த 65 ஆண்டுகால வரலாற்றில் எத்தனையோ பத்திரிகையாளர்களும், மாமேதைகளும், எழுத்தாளர்களும், சான்றோர்களும், கல்வியாளர்களும், அரசியல் தலைவர்களும், திட்ட அமைப்பாளர்களும் இப்பிரச்சினையைப் பற்றி ஆராய்ந்து அதற்குரியத் தீர்வுகளைக் காண முயற்சி செய்திருக்கிறார்கள்.

---

- ஆனால் பட்டதாரி இளைஞர்களைப் பாதித்துக் கொண்டிருக்கும் இந்த பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடிந்ததா?



முடியும்
உங்களால் முடியும்!!
நம்மால் முடியும்!!



**இந்தத் தேசத்து இளைஞர்கள் நினைத்தால் முடியும்.**

# 10 VISIONS OF I.N.D.I.A. TRUST

1. வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க இளைஞர்களிடையே தொழில் முனைவோர்களை உருவாக்குதல். (Entrepreneurship)
2. சராசரி திறமையுள்ள இளைஞர்களையும் வாழ்க்கையில் சிறந்த மனிதர்களாக உருவாக்குதல். (Human Potential Management)
3. கல்வி போதனைகளில் தனி மனித வாழ்க்கை முன்னேற்றம் - சமுதாயம் மற்றும் தேசிய மேம்பாட்டுக் கருத்துகளைக் கொண்டு வருதல். (Education for Nation)
4. ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் வலிமைமிகு இளைஞர்களை உருவாக்கி, நமது நாடு அதிகமான வெற்றிகளைப் பெறுவதற்கு விளையாட்டுத் துறையை ஊக்குவித்தல். (Sports Development)
5. நமது நாட்டின் மனிதவளத்தரத்தினை நிர்ணயிக்கும் ஆசிரியர்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்குத் துணைபுரிதல். (Teachers' Development)
6. தங்கள் குழந்தைகளின் முன்னேற்றத்திற்குப் பக்க பலமாக வாழ்ந்து கொண்டிருக்கும் பெற்றோர்களுக்கு, குழந்தை வளர்ப்பு, குடும்ப முன்னேற்றம், இளைஞர்கள் நிர்வாகம் பற்றிய சிறப்பானப் பயிற்சி அளித்தல். (Parenting Management)
7. சர்வதேச வல்லமைப் படைத்துக் கொண்டிருக்கும் நமது நாட்டிற்குத் தேவையான எதிர்காலத் தலைவர்களை எல்லாத் துறைகளிலும் உருவாக்குதல். (National Leadership Service)
8. அறிவு, ஆற்றல், திறமை மிக்க இளைஞர்களை நாட்டுப்பணி, சமுதாய மேம்பாட்டுப்பணி, கிராமப்புற வளர்ச்சிப் பணி போன்றத் துறைகளில் ஈடுபடுத்திப் பயிற்சிக் கொடுக்க உலகத்தரம் மிக்க பல்கலைக்கழகம் ஒன்றை உருவாக்குதல். (I.N.D.I.A. Trust University)
9. வேளாண் துறையை இளைஞர்களை ஈர்க்கும் துறையாக மாற்றி விவசாயப்புரட்சியை உருவாக்குதல். (Agricultural Revolution)
10. ஒவ்வொரு கல்லூரியிலும், பள்ளியிலும் 'HRD LEADERSHIP CENTRE' என்ற அமைப்பினை அரசு சாராத் தொண்டு நிறுவனத்தின் அடிப்படையில் (N.G.O.) உருவாக்கி, குழந்தைகள், மாணவர்கள், பெற்றோர்கள், பள்ளியைச் சார்ந்த சமுதாயத்தினர் ஆகியோர்களைச் சுற்றுப்புற மேம்பாட்டு, மற்றும் சமூகப் பணிகளில் ஈடுபடுத்த வழிகாட்டுதல். இதற்குத் துணைப்புரிய தொழில் நிறுவனங்களைப் பங்கேற்க வைத்தல். (Corporate Social Responsibility)

*This ten visions are dedicated to the parents, teachers, educators and students, who are the future of our country, who will create the new tomorrow through their quest for knowledge, nobility and profound character.*

**I.N.D.I.A. TRUST**

**God Mother Campus:** R-2, Santham colony, Annanagar West Extn., Thirumangalam, Anna Nagar. Ch- 600 101 | **PH: 044 - 65551482|9500005541 | 9790896522**

**URL : www.indiatrust.org | EMAIL : indiatrustnation@gmail.com**

**" From the Nation, we Have... To The Nation, we Want..."**